## விருது...



சென்னையில் ஞாயிற்றுக்கிழமை யோகி ராம்சுரத்குமார் எழுத்தாளர் பாலகுமாரன் அறக்கட்டளை மற்றும் பொற்றாமரை கலை இலக்கிய அரங்கம் இணைந்து நடத்திய விழாவில் பாலகுமாரன் 3-ஆம் ஆண்டு இலக்கிய விருதை எழுத்தாளர் ஆத்மார்த்திக்கு வழங்கிய மணிப்பூர் ஆளுநர் இல.கணேசன். உடன் (இடமிருந்து) பொற்றாமரை பொதுச்செயலாளர் கி.சங்கரன், பொற்றாமரை ஆலோசகர் சந்திரா கோபாலன், பாஜக அறிவுசார் பிரிவு தலைவர் ஷெல்வீ, பாலகுமாரனின் மகன் சூர்யா பாலகுமாரன், சொற்பொழிவாளர் சுகி.சிவம், எழுத்தாளர் பட்டுக்கோட்டை பிரபாகர் உள்ளிட்டோர்.

# மழைநீர் வடிகால் பணி: நகராட்சி நிர்வாகத் துறை செயலர் ஆய்வு

**சென்னை, நவ. 14:** சென்னை கோடம்பாக்கம் மண்டலத்துக்கு உள்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணியை நகராட்சி நிர்வாகத் துறை கூடுதல் தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார்.

சென்னையில் பலத்த மழை காரணமாக குடியிருப்பு பகுதிகளில் தேங்கியுள்ள நீரை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகளைப் பார்வையிட 15 மண்டலங்களுக்கும் மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் சிறப்பு கண்காணிப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மழையால் அதிகம் பாதிக்கப்பட்ட கோடம்பாக்கம் மண்டலத்துக்கு உள்பட்ட தியாகராய நகர் ரங்கராஜபுரம், ராகவய்யா சாலை, அஷீஸ் நகர் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணியை சிவ்தாஸ் மீனா ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, வட்டார ஒருங்கிணைப்பு சிறப்பு அலுவலர் பங்கஜ்குமார் பன்சால், சிறப்பு கண்காணிப்பு அதிகாரி ராஜாமணி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## சென்னையில் மழை பாதித்த பகுதிகள்

# எட்டாவது நாளாக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு

**சென்னை, நவ. 14:** சென்னையில் மழை பாதித்த பகுதிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின், நேரில் ஆய்வு செய்தார். அப்போது, மழைக் கால சிறப்பு மருத்துவ முகாமைத் தொடக்கி வைத்தார்.

சென்னையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை எட்டாவது நாளாக முதல்வர் மு.க.ஸ்டாலின், ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார். சென்னை வில்லிவாக்கம் சட்டப் பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட லாக்மா நகரில் கரோனா தடுப்பூசி மற்றும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமை அவர் தொடங்கி வைத்தார். கொளத்தூர் சட்டப் பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட மைலப்பா தெரு, நேரு மண்டபப் பகுதி ஆகிய இடங்களில் மழைக் கால சிறப்பு மருத்துவ முகாமை முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மேலும், மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்களை அளித்தார்.

சென்னை திரு.வி.க.நகர் சட்டப் பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட சங்கர பக்தன் தெரு, கொன்னூர் நெடுஞ்சாலை ஆகிய பகுதிகளில் மழை நீரால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு நிவாரணப் பொருள்களையும் முதல்வர் அளித்தார். பின்னர் கொளத்தூர் சட்டப் பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட மைலப்பா தெரு, நேரு மண்டபப் பகுதியில் மழைக் கால சிறப்பு மருத்துவ முகாமைப் பார்வையிட்டு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார்.



சென்னை கொளத்தூர் வெற்றி செல்வி அன்பழகன் நகரில் அமைந்துள்ள எஸ்.ஐ.பி. நினைவு அறக்கட்டளை காப்பகத்தைச் சேர்ந்த ஆதரவற்ற குழந்தைகளுக்கு நிவாரணப் பொருள்களை வழங்கி அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின்.

மாதவரம் நெடுஞ்சாலை கமலாம்பாள் திருமண மண்டபம், வி.வி.நகர் பிரதான சாலை, மூகாம்பிகை நகர் ஆகிய இடங்களில் மழைக் கால சிறப்பு மருத்துவ முகாமைப் பார்வையிட்டு மக்களிடம் சிகிச்சைகள் பற்றி கேட்டறிந்தார். இதைத் தொடர்ந்து, பெரம்பூர் பல்லவன் சாலை, கே.கே.நகர் நிழற்சாலை ஆகிய இடங்களில் மழையால் ஏற்பட்டிருந்த பள்ளத்தை பார்வையிட்டு ஆய்வு செய்து உடனடியாக சரி செய்ய உத்தரவிட்டார்.

கொளத்தூர் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு தெருக்கள், பேப்பர் மில்ஸ் சாலை, பெரவள்ளூர் உள்ளிட்ட இடங்களிலும், சென்னை வில்லிவாக்கம் பாரதி நகர் கிழக்கு ஏரிக்கரை தெரு, சென்னை எழும்பூர் தொகுதிக்கு உட்பட்ட டோபிகானா பகுதி உள்ளிட்ட இடங்களிலும் மழை பாதிப்புகளை ஆய்வு செய்தார். இந்த நிகழ்வில், அமைச்சர்கள் எ.வ.வேலு, பி.கே. சேகர்பாபு, மக்களவை உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள் உள்பட பலரும் பங்கேற்றனர்.

**கூடுதலாக 200 முகாம்கள்:** சென்னை மாநகராட்சி சார்பில் 200 வார்டுகளிலும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகளின் சார்பில் கூடுதலாக 200 சிறப்பு மருத்துவ முகாம்கள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## நிவாரண உதவி...



சென்னை வேளச்சேரி பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் தென்சென்னை மாவட்ட பொருளாளர் ரெக்ஸ் ஆண்ட்ரூஸ் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை உணவு வழங்குகிறார் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநில பொதுச்செயலாளர் கே.சிரஞ்சீவி. உடன் சட்டப்பேரவை உறுப்பினர் ஜே.எம்.ஹெச். ஹசன் மௌலானா உள்ளிட்டோர்.

# கரோனா சிகிச்சையில் 9,616 பேர்

**சென்னை, நவ. 14:** தமிழகத்தில், ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி கரோனா பாதிப்புக்குள்ளாகி 9,616 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மாநிலத்தில் இதுவரை 5.26 கோடிக்கும் மேற்பட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் 27 லட்சத்து 14,830 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை வெளியான பரிசோதனை முடிவுகளில் 805 பேர் கரோனாவால் பாதிப்புக்குள்ளானது தெரியவந்துள்ளது. அதில், அதிகபட்சமாக சென்னையில் 128 பேருக்கும், கோவையில் 125 பேருக்கும், ஈரோட்டில் 78 பேருக்கும் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

இதனிடையே, கரோனா தொற்றிலிருந்து மேலும் 929 பேர் கரோனாவிலிருந்து விடுபட்டு வீடு திரும்பியுள்ளனர். இதன் மூலம் இதுவரை குணமடைந்தோரின் எண்ணிக்கை 26 லட்சத்து 68,930-ஆக அதிகரித்துள்ளது. மருத்துவமனைகளிலும், வீடுகளிலும் தற்போது மருத்துவக் கண்காணிப்பில் 9,616 பேர் உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் கரோனா பாதிப்புக்குள்ளாகி மேலும் 11 பேர் பலியானதை அடுத்து நோய்த் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 36,284-ஆக அதிகரித்துள்ளது.

# மூன்று நாள்களுக்குள் குப்பைகள் அகற்றப்படும்

## ஆணையர் ககன்தீப் சிங் பேடி

**சென்னை, நவ. 14:** சென்னையில் மழை காரணமாக சாலைகள், தெருக்களில் தேங்கிய குப்பைகள் மூன்று நாள்களுக்குள் அகற்றப்படும் என மாநகராட்சி ஆணையர் ககன்தீப்சிங் பேடி தெரிவித்துள்ளார்.

சென்னையில் பெய்த பலத்த மழை காரணமாக மாநகரின் பல்வேறு இடங்களில் தேங்கியுள்ள நீரை அகற்றும் பணியில் மாநகராட்சி ஈடுபட்டு வருகிறது. இந்த மழை காரணமாக நீரில் அடித்து வரப்பட்ட குப்பைகள் சாலைகள் மற்றும் தெருக்களில் தேங்கி உள்ளன. திரு.வி.க.நகர் மண்டலத்துக்கு உள்பட்ட ஆஞ்சநேயர் கோயில் தெருவில் குவிந்துள்ள குப்பைகள் அகற்றும் பணியை ஆணையர் ககன்தீப்சிங்பேடி ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார். இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், சென்னையில் மழைநீர் வெளியேறிய பகுதிகளில் நடைபெற்ற தீவிர தூய்மைப் பணி மூலம் சனிக்கிழமை மட்டும் 5,600 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. பிறநகராட்சிகளிலிருந்து 500 தூய்மைப் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.க.நகர், அம்பத்தூர் மற்றும் அண்ணா நகர் ஆகிய மண்டலங்களில் தீவிர தூய்மைப் பணி நடைபெற்று வருகிறது. 15 மண்டலங்களிலும் அடுத்த மூன்று நாள்களுக்குள் தீவிர தூய்மைப் பணி மூலம் சாலை மற்றும் தெருக்களில் தேங்கியுள்ள குப்பைகள், சகதிகள் அகற்றப்படும். பூங்காக்களில் தேங்கியுள்ள மழைநீரை முழுவதுமாக அகற்றவும்,



சென்னை, திரு.வி.க. நகர் பகுதியில் மழையால் அடித்து வரப்பட்ட குப்பைகள் மற்றும் கழிவுகளை தீவிர தூய்மைப் பணி திட்டத்தின் கீழ்அகற்றும் பணிகளை ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்த பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி.

மரக்கிளைகள், தோட்டக்கழிவுகளை உடனடியாக அகற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

குடிநீரில் சரியான அளவு குளோரின் இருப்பதை உறுதி செய்ய அனைத்து வார்டுகளிலும் சுகாதார ஆய்வாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. குளோரின் குறைவாக உள்ள பகுதிகளில் மாநகராட்சியின் சார்பில் இதுவரை 20,000 குளோரின் மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மழையால் அதிகம் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் ஒரு குடும்பத்துக்கு 500 கிராம் பிளீச்சிங் பவுடர் இலவசமாக வழங்கப்படவுள்ளது. 200 வார்டுகளில் 2 லட்சத்து 90 ஆயிரத்து 497 தெருவிளக்குகள் பராமரிக்கப்படுகின்றன. மழையின் காரணமாக பழுதடைந்த அனைத்து தெருவிளக்குகளும் திங்கள்கிழமைக்குள் சரி செய்யப்படும் என்றார்.

# அனைத்து சிறப்பு விரைவு ரயில்களில் பழைய கட்டண முறை

## கரோனாவுக்கு முன்பு இருந்தபடி ரயில்கள் இயக்கப்படும்

**சென்னை, நவ.14:** ரயில்வே வாரிய உத்தரவைத்தொடர்ந்து, தற்போது இயக்கப்படும் அனைத்து சிறப்பு விரைவு ரயில்களிலும் கடந்த சனிக்கிழமை முதல் பழைய கட்டண முறை அமலுக்கு வந்தது. இதன்படி கரோனா காலத்துக்கு முன்பு இருந்தபடி ரயில்கள் இயக்கப்படும்.

கரோனா நோய்த்தொற்று பரவல் காரணமாக, நாடு முழுவதும் கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டது. இதையடுத்து, பயணிகள் ரயில் சேவை முழுமையாக ரத்து செய்யப்பட்டது. பொதுமுடக்கம் படிப்படியாக தளர்த்திய பிறகு, அனைத்து வழித்தடங்களிலும் சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன.

அதாவது, மெயில், விரைவு சிறப்பு ரயில்கள் மற்றும் விடுமுறை மற்றும் பண்டிகை சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன. இவற்றில், குறிப்பிட்ட சில ரயில்களில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டது. குறிப்பாக, விடுமுறை மற்றும் பண்டிகை கால சிறப்பு ரயில்களில் கூடுதல் கட்டணம்

வசூலிக்கப்பட்டது. பின்னர், அடுத்தடுத்து முன்பதிவு இல்லாத பெட்டிகள் இணைப்பு, முன்பதிவு இல்லாத ரயில்கள் இயக்கம் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இந்நிலையில், சிறப்பு ரயில் இயக்க நடைமுறையை ரத்து செய்து பழைய கட்டண முறையில் விரைவு ரயில்கள் இயக்க ரயில்வே வாரியம் உத்தரவிட்டது. இந்த உத்தரவு கடந்த சனிக்கிழமை உடனடியாக அமலுக்குவந்தது. நாடு முழுவதும் 1,700 சிறப்பு ரயில்கள் மீண்டும் பழைய கட்டண முறையில் இயக்கப்பட்டன.

இதற்கு பயணிகள், ரயில் பயணிகள் சங்கங்கள் வரவேற்பு தெரிவித்துள்ளன.

இது குறித்து தெற்கு ரயில்வே அதிகாரி கூறியது:

பழைய கட்டண முறையில் ரயில்களை இயக்க வேண்டும் என்ற ரயில்வே வாரியத்தின் உத்தரவை அமல்படுத்திஉள்ளோம். தெற்கு ரயில்வே மற்றும் தென் மேற்கு ரயில்வேயில் இருந்து புறப்படும் பண்டிகை காலை சிறப்பு ரயில்களை வழக்கமான சேவைகளாக மாற்றி, கட்டண திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணி சென்னை தரவு மையத்தில் முடிக்கப்பட்டு, பழைய கட்டணத்தில் பயணிகள் முன்பதிவு செய்கிறார்கள்.

இதுபோல, மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், விளையாட்டுத்துறையில் பதக்கம் பெற்றவர்கள் உள்ளிட்டோருக்கு அளிக்கப்பட்டு வந்த கட்டண சலுகைகள் மீண்டும் வழங்கப்படும் என்றார் அவர்.

**293 ரயில்களின் எண்கள் மாற்றம்:** ரயில்களின் எண்கள் மாற்றப்படுவதை பொருத்தவரை, ரயில்வே தகவல் அமைப்புகளுக்கான மையம் மூலமாக, அடுத்த வாரத்தில் 3,000-க்கும் மேற்பட்ட ரயில்களின் எண்களை மாற்றம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருநாளைக்கு சுமார் 500 ரயில்களின் எண்கள் மாற்றம் செய்யப்படுகிறது. தெற்கு ரயில்வேயில் 293 ரயில்களின் எண்கள் படிப்படியாக மாற்றம் செய்யப்படவுள்ளது.



## 7 நாள்களுக்கு நள்ளிரவு முதல் அதிகாலை வரை ரயில்வே முன்பதிவு சேவை கிடைக்காது

ரயில்வேயில் பயணச்சீட்டு முன்பதிவு தரவு மேம்படுத்துதல் மற்றும் புதிய எண்கள் புதுப்பித்தலுக்காக, ரயில்வே பயணிகள் முன்பதிவு சேவை ஞாயிற்றுக்கிழமை முதல் அடுத்த 7 நாள்களுக்கு இரவு 11.30 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை நிறுத்தப்படும் என்று ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது. இந்தநேரத்தில், பயணச்சீட்டு முன்பதிவு உள்பட சில சேவைகள் கிடைக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் ரயில் சேவை கரோனாவுக்கு முந்தைய நிலைக்கு திரும்பும் நடவடிக்கையின் ஒருபகுதியாக, ரயில்வே பயணிகள் முன்பதிவு சேவை ஞாயிற்றுக்கிழமை முதல் அடுத்த 7 நாள்களுக்கு இரவு 11.30 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை நிறுத்தப்படுகிறது. இந்த நடவடிக்கை நவம்பர் 14 மற்றும் 15-ஆம் தேதிக்கு இடைப்பட்ட இரவிலிருந்து ( இரவு11.30 மணி முதல் அதிகாலை 5.30 வரை) தொடங்கி நவ 21ஆம்தேதி அதிகாலை வரை நடைபெறும். அப்போது, புதிய ரயில் எண்கள் புதுப்பித்தல், புதிய தரவு மேம்படுத்தல் போன்ற பணிகள் நடைபெறவுள்ளன.

இந்த 6 மணி நேரத்தில் (இரவு 11.30 முதல் அதிகாலை 5.30 மணி வரை) பயணிகள் முன்பதிவு சேவைகள் (டிக்கெட் முன்பதிவு, நடப்பு முன்பதிவு, டிக்கெட் ரத்து செய்தல், விசாரணை போன்றவை) கிடைக்காது என்று தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிவாரண மையங்களாக செயல்படும் பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை

**சென்னை, நவ. 14:** வெள்ள பாதிப்பு நிவாரண மையங்களாக செயல்படும் அரசுப் பள்ளிகளுக்கு மட்டும் திங்கள்கிழமை விடுமுறை அளிக்கப்படுவதாக சென்னை மாவட்ட ஆட்சியர் ஜெ.விஜயா ராணி தெரிவித்துள்ளார்.

சென்னையில் பெய்த பலத்த மழையால் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு, மழையால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு அரசுப் பள்ளிகள் நிவாரண மையங்களாக செயல்பட்டு வருகின்றன. இதற்கிடையே திங்கள்கிழமை மீண்டும் பள்ளிகள் திறக்கப்படும் நிலையில், மையங்களாக செயல்படும் பள்ளிகளைத் தவிர மற்ற அரசுப் பள்ளிகள் வழக்கம்போல் இயங்கும் என சென்னை மாவட்ட ஆட்சியர் ஜெ.விஜயா ராணி வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


STAR Health Insurance — Personal & Caring — The Health Insurance Specialist

**STAR HEALTH AND ALLIED INSURANCE CO LTD**
Corp. Office: "Star Insurance Towers", No.1, New Tank Street, Valluvar Kottam High Road, Nungambakkam, Chennai - 600 034.
Toll Free No. : 1 800 425 2255, Website: www.starhealth.in
CIN: U66010TN2005PLC056649, Email: info@starhealth.in

**STATEMENT OF FINANCIAL RESULT FOR THE QUARTER AND YEAR TO DATE ENDED SEPTEMBER 30, 2021**

(Rs. in '000s)

| Sr. No. | Particulars | Three Months ended: September 30, 2021 Audited | Three Months ended: September 30, 2020 Audited | Six Months ended: September 30, 2021 Audited | Six Months ended: September 30, 2020 Audited | Year ended: March 31, 2021 Audited |
|---|---|---|---|---|---|---|
| 1 | Total Income from Operations (Note 1) | 28,846,791 | 24,172,816 | 50,697,818 | 39,559,462 | 93,885,387 |
| 2 | Net Profit/(Loss) for the period (before Tax, Exceptional and / or Extraordinary Item) | (2,323,425) | (578,352) | (5,126,317) | 1,491,710 | (14,458,055) |
| 3 | Net Profit/(Loss) for the period before tax (after Exceptional and / or Extraordinary Item) | (2,323,425) | (578,352) | (5,126,317) | 1,491,710 | (14,458,055) |
| 4 | Net Profit/(Loss) for the period after tax (after Exceptional and / or Extraordinary Item) | (1,704,892) | (331,796) | (3,802,664) | 1,131,083 | (10,857,137) |
| 5 | Total Comprehensive Income for the period (Comprising Profit / (loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax) (Note 2) | NA | NA | NA | NA | NA |
| 6 | Paid up Equity Capital | 5,532,899 | 4,906,380 | 5,532,899 | 4,906,380 | 5,480,869 |
| 7 | Reserves (excluding Revaluation Reserve) | - | 4,742,858 | - | 4,742,858 | - |
| 8 | Securities Premium Account | 37,501,713 | 10,369,828 | 37,501,713 | 10,369,828 | 36,607,852 |
| 9 | Net Worth | 31,986,587 | 20,019,066 | 31,986,587 | 20,019,066 | 34,846,288 |
| 10 | Paid Up Outstanding Debt | 6,500,000 | 2,500,000 | 6,500,000 | 2,500,000 | 2,500,000 |
| 11 | Outstanding Redeemable Preference shares | NA | NA | NA | NA | NA |
| 12 | Debt Equity Ratio (No. of times) | 0.20 | 0.12 | 0.20 | 0.12 | 0.07 |
| 13 | Earnings per share (of Rs.10/- each) (for Continuing and discontinued Operations) | | | | | |
| | 1. Basic | (3.08) | (0.68) | (6.93) | 2.31 | (21.75) |
| | 2. Diluted | (3.08) | (0.68) | (6.93) | 2.23 | (21.75) |
| 14 | Capital Redemption Reserves | - | - | - | - | - |
| 15 | Debenture Redemption Reserves | 150,000 | 150,000 | 150,000 | 150,000 | 150,000 |
| 16 | Debt Service Coverage Ratio (No. of times) | (34.48) | (7.96) | (38.86) | 12.62 | (55.48) |
| 17 | Interest Service Coverage Ratio (No. of times) | (34.48) | (7.96) | (38.86) | 12.62 | (55.48) |

Notes:
1. Total Income from Operations represents Gross Written Premium (GWP).
2. The Indian Accounting Standards (IND AS) are currently not applicable to Insurance Companies in India
3. The above is an extract of the detailed format of quarterly and year to date Financial results filed with the Stock Exchange under Regulation 52 of SEBI (Listing Obligations and Disclosure requirements) regulations, 2015. The full format of quarterly and year to date Financial results are available on the website of Stock Exchange (www.nseindia.com) and the Company (www.starhealth.in)
4. For other line items referred in Regulation 52 (4) of SEBI (Listing Obligations and Disclosure requirements) regulations, 2015, pertinent disclosures have been made to Stock Exchange (NSE) and can be accessed on www.nseindia.com

**Registration No. and Date of Registration with the IRDAI : 129/16.03.2006**

For and on behalf of Board of Directors
Sd/-
V. Jagannathan
Chairman and CEO
DIN: 01196055

Place: Chennai - 600 034
Date: November 11, 2021

SHAI/2021-22/PRINT(FR FOR QTR AND YEAR TO DATE ENDED 30-09-2021)/001. Insurance is the subject matter of solicitation. For more details on risk factors, terms and conditions please read the sales brochure carefully before concluding a sale. IRDAI clarifies to public that IRDAI or its officials do not involve in activities like sale of any kind of insurance or financial products nor invest premiums. IRDAI does not announce any bonus. Public receiving such phone calls are requested to lodge a police complaint along with details of phone call, number.